# விலைமனு கோரல்
## விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
## இலங்கை நில அளவைத் திணைக்களம்
## GNSS Instrument, சுத்திகரிப்புச் சேவைக்காக விலை மனு கோரல் – 2025
## விலை மனு இலக்கம் – SD/V/2025

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு (பிரதான) தவிசாளரினால் GNSS Instument, சுத்திகரிப்பு சேவைக்காக விலை மனுக்களைக் கோருவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலை மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | உருப்படி இலக்கம் 01 | உருப்படி இலக்கம் 02 |
|---|---|---|
| | **நில அளவைத் திணைக்களத்திற்கு சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளுதல்** **(2025/ 2026 ஆம் ஆண்டிற்கு ஒரு வருட காலத்திற்கு)** | **GNSS Instument 30** |
| **மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூ)** | 12,000,000.00 | 22,500,000.00 |
| **விலை மனு காப்பீடு (ரூ.)** | 129,000.00 | 337,500.00 |
| **விலை மனு காப்பீடு செல்லுபடியாகும் காலம்** | 2026.01.02 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். | 2026.01.05 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |
| **மீள செலுத்தப்படாத விலை மனுப் பத்திரக் கட்டணம் (ரூ.)** | 5,000.00 | 10,000.00 |
| **விலை மனு கோரும் ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய திகதி மற்றும் நேரம்** | 2025.08.29 ஆம் திகதி தொடக்கம் 2025.09.18 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை | 2025.08.29 ஆம் திகதி தொடக்கம் 2025.09.19 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை |
| **முன் விலை மனு ஒன்றுகூடல்** | 2024.09.08 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் | 2024.09.09 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் |
| **விலை மனு வைப்புச் செய்தலை முடித்தல்** | 2025.09.19 மு.ப. 11. 30 மணிக்கு | 2025.09.22 மு.ப. 11. 00 மணிக்கு |
| **விலை மனுக்களைத் திறத்தல்** | 2025.09.19 மு.ப. 11. 35 இற்கு பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு | 2025.09.22 மு.ப. 11. 05 மணிக்கு பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு |
| **விலை மனு செல்லுபடியாகும் காலம்** | 2025.12.05 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். | 2025.12.08 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |

**2.** மதிப்பிடப்பட்ட செலவினம் மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் அமையும்.

**3.** கட்டளை பெறப்பட்டு 1 மாத (04 வாரங்கள்) காலத்திற்குள் குறித்த சுத்திகரிப்பு சேவைகளை வழங்க ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன், அன்றில் இருந்து ஒரு வருட காலம் சேவைளை வழங்க வேண்டும். அவ்வாறே, GNSS Instument இற்கு கட்டளை பெறப்பட்டு 1 ½ மாத (06 வாரங்கள்) காலத்திற்குள் வழங்குதல் வேண்டும்.

**4.** விலை மனு கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.

**5.** ஆர்வம் காட்டுகின்ற தகுதி வாய்ந்த விலை மனுதாரர்களுக்கு இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்) | snrsspns@survey.gov.lk அவர்களிடம் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டு பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெறுகை ஆவணங்களைப் பரிசீலிக்க முடியும்.

**6.** தகைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளன.

**7.** பின்வரும் முகவரிக்கு கோரிக்கை முன்வைப்பதன் மூலம், ஆர்வம் காட்டுகின்ற விலை மனுதாரர்களுக்கு பூரண விலை மனுத் தொகுதி ஒன்றை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மீள செலுத்தப்படாத கட்டணத்தை பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திய பின்னர் கொள்வனவு செய்ய முடியும்.

**8.** விலை மனுக்கள் பின்வரும் முகவரிக்கு மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரிக்கு பிரத்தியேகமாக வருகை தந்து கலந்து கொள்கின்ற விலை மனுதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும். சகல விலை மனுக்களுடனும் விலை மனு காப்பீடும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட முகவரி :** சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்), நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05. | தொலைபேசி / தொலைநகல் – 0112 368106 | snrsspns@survey.gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (பெரிய) சார்பாக,
இலங்கை நில அளவைத் திணைக்களம்.
2025.08.29